## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.25/2021

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 4 ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜனவரி மாதம் 06 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ஹரிகுமார் | மதம் | : இந்து |
| த/பெ | : குமரேசன் | ஜாதி | : -- |
| வயது | : 41 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் | : தனியார் நிறுவனம் | வட்டம் | : திருத்தணி |

06.01.2025

<u>வா.சா. 4 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்க விசாரணை</u>

1. எனக்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி ரமேஷ் எனது நண்பர் என்றாலும் அவர் அழைத்துதான் நான் வந்தேன் என்றாலும் சரிதான். நான் கையெழுத்திட்ட ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்றால் சொத்து குறித்து எழுதப்பட்டிருந்தது. அது எந்த வகையான பரிமாற்றம் என்றால் செட்டில்மெண்ட் ஆவணம் ஆகும். அந்த ஆவணத்தின் மூலம் யார் யாருக்கு செட்டில்மெண்ட் செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் ரமேஷின் மனைவி ரமேஷ்க்கு எழுதிக்கொடுத்துள்ளார். என்ன ஆவணம் வைத்தார்கள் என்பதும் அசல் ஆவணம் எங்குள்ளது என்பதும் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2. ஆவண எண், தேதி தெரியுமா என்றால் 2017 ம் வருட ஆவணம் ஆகும். தேதி நினைவில்லை. ஆவணத்தை யார் எழுதியது மற்றும் தயாரித்து என்பது சொல்ல முடியுமா என்றால் ஞாபகமில்லை. நான் சாட்சி கையெழுத்திட்டபோது உடன் யார் யார் இருந்தார்கள் என்றால் ரமேஷ், ரமேஷ் மனைவி, நான் மற்றும் இருவர் இருந்தோம். அந்த இருவர் யார் என்று தெரியாது. நான் சாட்சி கையெழுத்திட்டை எங்குவைத்து போட்டேன் என்றால்

சார்பதிவாளர் அலுவலகத்தில் போட்டேன். நான் பத்திரம் எழுதிய அலுவலகத்தில்தான் சாட்சி கையெழுத்து போட்டேன் என்றால் சார்பதிவாளர் அலுவலகத்தில் போட்டேன். நான் சாட்சிகையெழுத்து போடும்போது சார்பதிவாளர் இருந்தாரா என்றால் இருந்தார். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் ஏற்கனவே நான் சாட்சி கையெழுத்து போடும் போது ரமேஷ், ரமேஷ் மனைவி, நான் மற்றும் இருவர் இருந்தாக சொன்னேன் என்றாலும் சரியல்ல.

3. நான் சாட்சி கையெழுத்து போட்டவுடன் பத்திரப்பதிவு செய்யப்பட்டதா என்றால் ஞாபகமில்லை. நான் எத்தனை மணிக்கு சாட்சி கையெழுத்து போட்டேன் என்றால் நேரம் ஞாபகமில்லை. நான் வாதியின் நண்பர் என்பதால் வாதிக்கு ஆதரவாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)